# Chemical Peeling சிகிச்சை முறை

## 1. Chemical Peeling சிகிச்சை முறை என்றால் என்ன?

இது சில வகையான தோல் நோய்களுக்கு சில வகையான அமிலங்களை வெவ்வேறு செறிவுகளில் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்படும் சிகிச்சை முறையாகும்.

இதன் மூலம் தோல் நிறமாற்றங்கள், கருமையடைதல், தோல் சுருக்கம், முகப்பரு எண்ணெய்த்தன்மையான தோல் போன்றவற்றிற்கு சிகிச்சையளிக்க முடியும்.

## 2. Chemical Peeling சிகிச்சை முறையின் போது என்ன மாற்றங்கள் நடைபெறும்?

அமிலத்தை பூசும் போது அது தோலின் மேற்படைகளை அகற்றும். இதனால் கீழ்ப்படையிலுள்ள சுகதேகியான கலங்கள் பெருக்கமடைந்து, நல்ல, பிரகாசமான தோற்படையை தோற்றுவிக்கும்.

## 3. Chemical Peeling ன் வகைகள் யாவை?

இதன் ஆழத்தைப் பொறுத்து 3 வகையாக பிரிக்கலாம்?

- மேலோட்டமானது (Superficial peeling)
  இது தோலின் மேற்படைகளை மாத்திரம் ஊடுருவும்.
- நடுத்தரமானது (Medium depth peeling)
  தோலில் முழு மேற்படைக்கும், கீழ்ப்படையின் மேற்பகுதிக்கும் அமிலம் ஊடுருவும்.
- ஆழமானது (Deep peeling)
  இது தோலின் கீழ்ப்படை வரை ஊடுருவும்.

  Peeling வகையானது தோலிலுள்ள பிரச்சினையைப் பொறுத்து வேறுபடும்.

## 4. எவ்வகையான நோய்களில் Peeling செய்வது பொருத்தமற்றது?

- தோலில் பக்றீரியா, வைரஸ் அல்லது பங்கசு கிருமித்தொற்று ஏற்படும் போது
- உடலில் ஏதாவது ஆரோக்கியமற்ற நிலை ஏற்படும் போது
- இதற்கு பயன்படுத்தும் பதார்த்தங்களில் ஏதாவது ஒன்றிற்கு அழற்சி ஏற்படும் சந்தர்ப்பத்தில்
- வாய், உதடு பகுதிகளில் (herpes simplex) வைரஸ் தொற்று ஏற்படும் போது (இதனை முறையாக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டும்.

## 5. தோல் எவ்வாறு முன் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும்?

Sunblock ஐ (சூரிய வெளிச்சத்திலிருந்து பாதுகாக்க) peelingற்கு சில கிழமைகளுக்கு முதலில் இருந்து பாவிக்க வேண்டும்.

## 6. இதன் போது ஏற்படும் பக்கவிளைவுகள் யாவை? இது பாதுகாப்பான சிகிச்சை முறையா?

எந்த வகையான சிகிச்சை முறைகளிலும் சில வகையான பக்கவிளைவுகள் இருக்கும்.

1. சிவந்து போதல்
2. சிறிதளவு நோ ஏற்படுதல்.
3. தோலில் உலர்வுத்தன்மை மற்றும் இறுக்கமாக காணப்படுதல்.
4. தோல் சொறிவு
5. தோல் உரிதல்

இவையாவும் தற்காலிகமானவை. அத்துடன் விரைவில் குறைந்து போய்விடும்.

## 7. எவ்வகையான பிரச்சினைகள் வரலாம்?

இலங்கையில் Superficial Peeling மட்டுமே செய்யப்படுகிறது. இதனால் ஏற்படும் பக்கவிளைவுகள் மிக அரிதானவை.

1. தோல் கருமையடைதல்.
2. வடுக்கள் ஏற்படலாம்.

## 8. இதனை வீட்டிலோ அல்லது அழகு சிகிச்சை நிலையத்திலோ செய்ய முடியுமா?

இதில் பாவிக்கப்படும் அமிலமானது வேறுபட்ட செறிவுகளில் தயாரிக்கும் போது சரியான விளைவுகளைப் பெற முடியாது. மேலும் கருமையடைதல், வடுக்கள் ஏற்படுதல் போன்றன ஏற்படலாம். இதனால் வீட்டில் இதனை செய்ய முடியாது. இதை தோல்சிகிச்சை நிபுணர் அல்லது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட ஒருவரால் மட்டுமே செய்ய முடியும்.

## 9. சிகிச்சைக்குப் பிறகு நீங்கள் செய்ய வேண்டியவை யாவை?

1. சூரிய ஒளியை தவிர்க்க வேண்டும். முடியாவிடின் Sunscreen creamஐ சூரிய ஒளியில் போவதற்கு முன்னர் பாவிக்க வேண்டும்.
2. ஆவி பிடித்தல், அழகுச்சிகிச்சை முறைகள் பாவித்தல் போன்றன வைத்திய ஆலோசனை பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டும்.
3. வைத்தியரால் அறிவுறுத்தப்படும் (Moisturizers) ஈரப்பதனூட்டிகள் பாவிக்க வேண்டும்.
4. வீக்கம், தோல் சிவப்படைதல், கருமையடைதல் போன்றன ஏற்பட்டால் உடனடியாக வைத்திய உதவியைப் பெற வேண்டும்.